the most abominable, and despicable thing. (If there is anything abominable in the long history of Indian Nation) It is this

அபமான ஜனக் அத்யாய

which is most despicable and abominable, Chapter, that is the period of regime of Mrs. Indira Gandhi, who not only tried to prepetrate her own rule but also tried most recklessly to bring her son as her political heir.

Therefore, Mr. Speaker, I very much express my gratitude and associate myself with the sentiments expressed by the people, who supported this Bill.

While I support this amending Bill, I would request the Janata Government to bring in an all-comprehensive legislation to remove all the distortions that were perpetrated on the Constitution of India, which strangulated the minorities, which butchered democracy and posed a danger to the very soul of democracy. With these words I support the present resolution.

*திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு, ஜனதாக் கட்சி தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிக்கேற்ப நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 44ஆவது அரசியல் சட்டத் திருத்தத்திற்கு ஆதரவைப் பெற இந்த மாமன்றத்தில் சட்டத்துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்று, ஆதரித்து சில கருத்துக்களை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் சுப்பு அவர்கள் குறிப்பிட்டது போல் இதை இந்த மன்றத்தின் முன் வைத்த நமது சட்ட அமைச்சர் அவர்கள், அவசர காலச் சட்டத்தால் இந்திய திருநாடு சர்வாதிகார இருளை நோக்கி இழுத்துச்செல்லப்படும் என்ற எச்சரிக்கையை விடுத்தவர் என்பதை நினைவுகூர்வது இன்றியமையாத ஒன்றாகும். நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்த பிறகு அவர் எழுதிய கட்டுரை ஒன்றை இந்த மாமன்றத்தில் படித்துக்காட்டியிருக்கி றேன். நெருக்கடி நிலை என்ற பெயரால் இந்தியாவுக்கு வர விருந்த பேராபத்து அண்மையில் நீங்கிவிட்டது என்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தி நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கட்டுரை தீட்டியிருந்தார்கள். தாமதமாக இதை உணர்ந்தார்கள் என்றாலும், உணர்ந்து திருந்திக் கொண்டோம் என்ற வகையில் நமக்கு நாமே ஆறுதலைக் கூறிக் கொள்ள முடியும்.

1978 மார்ச் 13] [திரு. மு. கருணாநிதி]

இந்த 42ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது பல கட்சிகளும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள் என்ற போதிலும், என்ன கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள் என்பதை ஏடுகளில் அன்றைக்கு நாம் காண இயலவில்லை.

நம்முடைய அவை முன்னவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அன்றைக்கு நாடாளுமன்றத்தில் அவர்களுடைய கட்சியின் சார்பில் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் எவை எவை என்று நான் இப்போது தான் அவரைக் கேட்டுத் தெரிந்து கொள்ள முடிந்ததே தவிர பத்திரிகைகளில் பார்த்து தெரிந்து கொள்ளக் கூடிய சூழ்நிலை அன்றைக்கு நாட்டில் இல்லை என்பதை இன்றைக்கு மெத்த வேதனையோடு எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அந்தத் திருத்தங்களில் எல்லா கருத்துக்களும் தங்களுக்கு உடன்பாடானவை என்று அவர்கள் முடிவெடுத்திடவில்லை என்று சொன்னார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இன்றைக்கு ஜனதா அணியில் இருக்கின்ற பல்வேறு கட்சிகள், அவைகளிலுள்ள உறுப்பினர்கள், அனைவரும் இந்தத் திருத்தத்தை அல்லது இந்தத் திருத்தத்திற்கு காரணமாக நெருக்கடி நிலையை மிகவும் வன்மையாக எதிர்த்ததின் காரணமாக எவ்வளவு இன்னல்களுக்கு ஆளாக நேரிட்டது என்பதைக் கடந்த கால வரலாற்று ஏடுகள் எதிர்காலத்திலும் சொல்லிக்கொண்டு இருக்கத்தான் போகின்றன.

[முற்பகல் 11-40]

எனவே, இந்த விவரங்களிலே எல்லாம் நான் இப்போது நுழைய விரும்பவில்லை. 'தேச விரோதம்' என்ற சொல்லை வைத்துக்கொண்டு, எதிர்க் கட்சிகளை அழித்து விடவேண்டும். தங்களுக்கு எதிராக உள்ள நிறுவனங்கள், தொழிற் சங்க அமைப்புகள், தொழிலாளர்களுடைய உரிமைக்குரல் அனைத்தையும் தீர்த்துக் கட்டிவிடுவது என்ற முனைப்பான முயற்சியை மையமிட்டிருந்தது. 'தேச விரோதம்' என்ற அந்தச் சொல்லில் யாரைப் பார்த்தாலும், யாரை வேண்டுமானாலும் 'தேச விரோதி' என்று கூறிவிடுவதன் மூலம் அந்தக் கட்சிகளை, அமைப்புகளை, இயக்கங்களை, லட்சியங்களை ஒடுக்கி விடலாம் என்கின்ற அடிப்படையிலேதான் 42ஆவது திருத்தம் என்ற பெயரில் சில பயங்கரமான முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

42ஆவது திருத்தம் வருவதற்கு முன்பு எப்படிப்பட்ட திருத்தங்களை எல்லாம் கொண்டு வரலாம் என்பதற்காக அமைக்கப்பட்ட சுவரன் சிங் குழுவினர் சில கருத்துக்களைத் தந்து, அதைப்பற்றிய

விளக்கங்களை நாடு தழுவிய வகையில் எல்லோரும் சொல்லலாம், அனைவருக்கும் உரிமை இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நண்பர் மாதவன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, சுவரன் சிங் குழுவினர் தந்திருக்கின்ற கருத்துக்களையெல்லாம் ஆராய்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அறிக்கை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அப்படி தயாரிக்கப்பட்ட கருத்துக்களை நாங்கள் பத்திரிக்கைகளிலே வெளியிட வேண்டுமென்று முயற்சித்தபோது, எல்லோருக்கும் அபிப்பிராயம் வழங்க உரிமையிருக்கிறது, தாராளமாக உங்களுடைய கருத்துக்களை வழங்கலாம் என்று சுவரன் சிங் குழுவினர் கூறியபோதிலும், மத்திய அரசு தன்னுடைய தணிக்கை அதிகாரிகள் மூலம் இப்படி வழங்கப்பட்டக் கருத்துக்களை பத்திரிகைகள் வெளியிட முடியாமல் குந்தகமான காரியங்களைச் செய்தது என்பதையும், நாம் இப்போது மறந்து விடுவதற்கில்லை. அந்தக் குழுவின் அறிக்கையிலே கோடிட்டுக் காட்டியதை நான் இங்கே படித்து, இந்த அவைக் குறிப்பிலே பதிய வைக்க வேண்டிய, எதிர்கால சரித்திரத்திற்கு மிக முக்கியமானது என்ற வகையிலே பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, சில வரிகளை இங்கே படிக்க விழைகிறேன்.

''கடமைகளை யாரும் எதிர்த்திட மாட்டார்கள். ஆனால் இந்தக் கடமைகளை அரசியல் அமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளுக்கும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஏனைய பிரிவுகளுக்கும் முரணாகச் செயல்படுத்திட பாராளுமன்றம் சட்டங்களை இயற்றலாம் என்பதும், இதில் நீதி மன்றங்கள் தலையிட முடியாது என்பதும், பேராபத்தாக அமைந்துள்ளன. ஜனநாயக நாட்டில் ஆட்சியின் அதிகார சுழலில் அமிழ்ந்து விடாமல் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் அடிப்படை உரிமைகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. கடமைகள் என்ற பெயரில் கொடுக்கப்பட்ட உரிமைகளைப் பறிப்பது ஜனநாயகத்திற்கு முரணாகும். கடந்த 26 ஆண்டுகளாக மேற் சொன்ன கடமைகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிக்கப்படாமலேயே சட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளன. அண்மை காலத்தில்தான் கடமைகள் என்ற பெயரில் அடிப்படை உரிமைகளைத் தகர்த்திடும் போக்கு எழுந்துள்ளது.''

என்று அந்தப் பரிந்துரை நூலின் முன்னுரை விளக்கம் கொடுக்கிறது.

நண்பர் திரு மனோகரன் அவர்கள், அன்றைய பாராளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்றத்திலே எடுத்துச் சொன்ன அந்தக் கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம்—யார் அந்தக்

கருத்தை முன்னுல் சொன்னுர்கள் என்ற போட்டிக்கு நான் வரவில்லை. 11-8-1976 அன்று வெளியிடப்பட்ட அந்த நூலில் வெகு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சுவரன் சிங் குழுவின் சிபார்சில்,

''இறையாண்மை வாய்ந்த ஜனநாயக, மத சார்பற்ற, சோஷலிச குடியரசு''

என்று இருக்கவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டதை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அளிக்கப்பட்ட அந்த அறிக்கையில்,

''இறையாண்மை வாய்ந்த, ஜனநாயக, மத சார்பற்ற, சோஷலிச கூட்டாட்சிக் குடியரசு''

என்று அமைய வேண்டுமென இந்தக் குழு வற்புறுத்துகிறது என்று அப்போது தெளிவாகச் சொல்லப்பட்டது. இந்தக் கருத்தை இன்றைய நிதி அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் நாடாளுமன்றத்திலே எடுத்து வாதாடியிருக்கிறுர்கள். இதைக் கேட்கவே எனக்கு இன்பமாக இருக்கிறது.

கூட்டாட்சித் தத்துவத்தை ஏற்றுக்கொண்டு விட்டால், தாகுகவே மாநில சுயாட்சித் தத்துவமும் அதிலிருந்து பிறந்து விடுகிறது. மாநில சுயாட்சி அமைப்பும் அதோடு இணைந்ததுதான். கூட்டாட்சித் தத்துவத்தை ஒப்புக்கொண்ட அமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில சுயாட்சியை நாங்கள் ஆதரிக்கவில்லை என்று அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் வாதாடினுலும்கூட, கூட்டாட்சியை ஒப்புக்கொண்ட பிறகு, மாநில சுயாட்சியை எதிர்ப்பது, 'எப்படி ஒரு அணு காசுக்குள், காலணுவும் அடங்கியது' என்று அண்ணு அவர்கள் சொன்னுரோ, அதைப்போல் கூட்டாட்சித் தத்துவத்தில் மாநில சுயாட்சியும் அடங்கியிருக்கிறது என்ற காரணத்தினுல் கூட்டாட்சி என்ற சொல்லும் அதிலே இருக்கவேண்டுமென்று அன்றைக்கே நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறும்.

ஆனுல் இப்படி கூட்டாச்சி, சுயாட்சி என்கிற இந்த வார்த்தைகள் பயன்படுத்தப்படுகிற நிகழ்ச்சிகள், இவைகள் மக்கள் மத்தியில் பரவிவிடாமல் தடுக்க அல்லது இந்த வார்த்தைகள் தத்துவங்களுக்கு மக்களிடத்தில் செல்வாக்கு வந்துவிடாமல் பார்த்துக் கொள்ள, தங்களுடைய பிரச்சார பலம் போதாது என்ற காரணத்தால் தான் நெருக்கடி காலத்திலே தேச விரோத நடவடிக்கைகள் என்ற பெயரால் அதைத் தடுக்க முனைந்தார்கள். 44-வது திருத்தத்தின் மூலம் அந்த நடவடிக்கை இப்போது

தவிர்க்கப்பட்டுவிட்டது. 44-வது திருத்தத்தை ஆதரித்துப் பேச காரணமே, இப்படிப்பட்ட பயங்கரமான நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் ஆளாக்கப்படத் தேவையில்லை என்ற மகிழ்ச்சியால் தான்.

ஆயினும் சட்டத்தின் மூலமாக இல்லாவிட்டாலும் இன்றைக்கு பிரச்சாரத்தின் மூலம் நடைபெறுகிறதா இல்லையா என்பதை இந்த அவையிலுள்ள உறுப்பினர்கள் எண்ணிப்பார்த்திட வேண்டும்.

இந்தி மொழித் திணிப்பு கூடாது என்று நாம் அனைவரும், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒருமுகமாகக் கருதுகிறேம். நேற்றைய தினம் கோவையில் நடைபெற்ற ஜனதா கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகத்தைப் படிக்கிற நேரத்தில் 'தமிழ்நாட்டில் பிரிவினை பிற்போக்கு சக்திகள் மொழி வெறியைத் தூண்டி விடுகின்றன' என்று தீர்மானத்தின் வாசகம் அமைந்திருக்கிறது. ஆக, தமிழ் மொழி காப்பாற்றபட வேண்டும், தமிழர் நலன்கள் காப்பாற்றப்பட வேண்டும், அதற்கு வேற்று மொழி ஆதிக்கம் வரக்கூடாது. இந்தி மொழித் திணிப்பை ஏற்க மாட்டோம் என்று சொல்கிற நேரத்தில் அப்படி சொல்லுகிற அனைவரும் பிரிவினைச் சக்திகள், பிற்போக்குச் சக்திகள் மொழிவெறியைத் தூண்டுகிறவர்கள் என்ற வகையில் தமிழ் நாட்டில் ஜனதா கட்சி மாநாட்டில் தீர்மானம் போடப்படுகிறது. நெருக்கடி காலத்தில் சட்டத்தை வைத்துச் செய்தார்கள், இப்போது பிரச்சாரத்தின் மூலம் செய்கிருர்கள். இரண்டுக்கும் இடையே பெருத்த மாறுபாடோ, முரண்பாடோ இருப்பதாகத் தெரியவில்லை.

இன்னெரு நிகழ்ச்சி—12-ஆம் தேதி ஜனதா கட்சித் தீர்மானம் போடுகிற அதே நேரத்தில் புதுடில்லியில் காங்கிரஸ் காரியக் கமிட்டி — இந்திரா காங்கிரஸ் அல்ல—காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி அவர்கள் போடுகிற தீர்மானத்திலே ' இந்தியாவிலே ஜனதா கட்சியும், இந்திரா காங்கிரஸும் பிராந்திய , பிற்போக்கு வகுப்புவாதக் கொள்கைகளைக் கொண்டவை' என்று தீர்மானம் போடுகிருர்கள். தமிழ் நாட்டிலே இந்தித் திணிப்பை எதிர்க்கிறவர்கள் பிரிவினை வாதிகள், பிற்போக்கு வாதிகள், மொழிவெறியைத் தூண்டிவிடுகிற சக்திகள் இன்று இங்கே உள்ளவர்களைப் பற்றி ஜனதா தீர்மானம் போடுகிறது. அதே நேரத்தில், இவர்களைப் பற்றி அதே நாளில் 12-ஆம்-தேதி புதுடில்லியில் 'பிற்போக்கு, பிராந்திய வகுப்புவாத சக்திகள்' என்று தீர்மானம் போடப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லக் காரணம், அரசியல் காலத்திற்கு காலம் எப்படி ஆகாயத்தில் அலைகிற மேகங்கள் அடிக்கின்ற காற்றிற்கு ஏற்ப உரு மாறுகிறதோ அதைப் போலவே மாறுகின்றன என்பதற்கு இவைகள் அடையாளங்கள்

என்ருலும்கூட, ஒரு கட்சியினுடைய கொள்கைகளை கோட்பாடுகளை எடுத்திச் சொல்லுகிற எண்ணங்களை ஒத்துக் கொள்ள இயலாத நிலையில் அதற்கான ஆதாரங்களை, கருத்துக்குக் கருத்து மோத விடுகின்ற நிலைமைகளை எடுத்து வைக்க வேண்டும் என்பதற்காகத் தான் சொல்லுகிறேன்.

ஒட்டு மொத்தமாக பிரிவினை வாதிகள், பிற்போக்கு வாதிகள் மொழி வெறியைத் தூண்டிவிடுகின்ற சக்திகள் என்று கூறுவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. என்னதான் அரசியல் சட்டத்திலே திருத்தங்கள் செய்தாலும் மையக் கருத்தி லிருந்து அகன்றுவிடக் கூடாது. இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு தேசிய இனங்களின் உரிமைகள், பல்வேறு தேசீய இனங் களின் கலாச்சாரங்கள், பல்வேறு தேசீய இனங்களின் பண்பாடு கள் காப்பாற்றப்பட அரசியல் சட்டத்திலே இடம் இருக்க வேண் டும் என்று நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொன்னேன்—அரசியல் அலைகள் எப்படி காற்றடிக்கின்ற திசை யில் எப்படி எல்லாம் மாறுகின்றன என்று குறிப்பிட்டேன்.

இப்போது இருக்கும் வேடிக்கை என்னவென்ருல், அருமை நண்பர் உமாநாத் அவர்கள் எடுத்துக் காட்டியது போல் 42-வது திருத்தம் அனைத்தையும் 44-வது திருத்தம் தீர்த்துவைத்துவிட்டதா என்ருல் இல்லை. தீர்த்து வைக்க முடியாத அளவிற்குப் பல சங்கடங்கள் இருப்பதை நடைமுறையில் நாம் உணர முடியும். அதற்கு நாடாளுமன்றத்தில் எத்தனை வாக்குகளைப் பெறவேண்டும் என்ற நிலை இருக்கிறது. அவைகளை எல்லாம் கருதி இதை— முள்ளில் போட்ட துணியை மெல்ல மெல்ல எடுப்பது போல இன் றைக்கு ஜனதா அரசு மற்ற எதிர்க் கட்சிகளைக் கூட்டி வைத்து மெல்ல மெல்ல செய்ய முன்வந்திருக்கிறது என்பதற்காகப் பாராட்டைத் தெரிவித்தாலும், இந்திரா காந்தி ஆண்ட நேரத் தில் ஜனதா கட்சித் தலைவர்கள் சொன்னதெல்லாம் 'வெளிநாட்டு அபாயம் இந்தியாவிற்குவந்தால் மட்டுமே அவசர நிலைப் பிரகட னத்தைப் பயன்படுத்த வேண்டும்; உள்நாட்டு அபாயம் என்று சொல்லி அவசர நிலையைப் பிரகடனப்படுத்தக் கூடாது' என்று வலியுறுத்தி வந்தார்கள். இன்றைக்கு நிலைமை அப்படியே தலை கீழாக மாறியிருக்கிறது. எப்படி இருந்தாலும் உள்நாட்டு அபா யம் என்று சொல்லி நெருக்கடி நிலையைப் பயன்படுத்தக் கூடாது என்று அன்று ஜனதா கட்சி சொல்லிற்று.

அன்றைக்கு காங்கிரஸ் கட்சி இந்திரா காங்கிரஸ் கட்சி நெருக்கடி நிலையைக் கொண்டு வந்தது. அன்று நெருக்கடி நிலையைக் கொண்டு வந்த காங்கிரஸ் கட்சி இன்றைக்கு எதிரில் அமர்ந்து கொண்டு, 'வெளிநாட்டு அபாயம் வந்தால் தான்' நெருக்கடி நிலையை அறிவிக்கலாம், உள்நாட்டு அபாயம் என்று சொல்லி நெருக்கடி நிலையை அறிவிக்கக்கூடாது, என்று வாதிடு

கின்ற அளவிற்கு காங்கிரஸ் கட்சி வந்திருக்கிறது. ஆனால் ஜனதா கட்சி தன்னுடைய அன்றைய நிலையிலிருந்து மாற்றிக் கொண்டிருக்கிறது.

[முற்பகல் 11-50]

அது மாத்திரமல்ல, நண்பர்கள் பலரும் இங்கே எடுத்து காட்டியதைப் போலவும் மாண்புமிகு உமாநாத் அவர்களும் திரு. சுப்பு அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னதைப் போலவும், இந்தத் திருத்தங்கள் மட்டும் போதாது, இன்னும் பல திருத்தங் கள் தேவை. மத்திய மாநில உறவுகளைச் சீர்படுத்த, மத்தியில் கூட்டாட்சியும் மாநிலங்களுக்கு சுயாட்சியும் தேவை என்ற அடிப்படையிலே திருத்தங்கள் தேவை அரசியல் சட்டத்திலே என்பதை நாம் இன்றைக்கு வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் இங்கே பேசிய நேரத்திலே சொன்னார்கள், சிக்கிம் பிரச்சினையில் எப்படி நடந்து கொண்டீர்கள், நான் திருப்பித் திருப்பிக் கேட் டக் கேள்விகளுக்கு அன்றைக்கிருந்த முதலமைச்சர் பதில் சொல்ல வில்லை என்று சொன்னார்கள். நான் அந்த நடவடிக்கைக் குறிப்பு களைப் பார்த்தேன். அன்றைய தினம் நான் பதில் சொல்லாவிட் டாலும் கல்வியமைச்சராகவிருந்த அவை முன்னவராக இருந்த இன்றைய தினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே அவைத் தலைவராக இருக்கின்ற நாவலர் இந்த அவை யில் ஆற்றிய உரையில் பதில் அளித்து இருக்கிறார், அதை அப் படியே படிக்கிறேன்.

'மாநில சுயாட்சியை இன்றும் கேட்கிறோம். அன்று எவ் வளவு அழுத்தந்திருத்தமாக மாநில சுயாட்சி கேட்டோமோ அப்படியே இன்றும் கேட்கிறோம். இந்தச் சிக்கிம் பிரச்சினைக்குப் பிறகு அதை இன்னும் அழுத்தந்திருத்தமாகக் கேட்க முடியும். எப்படி அரசியல் சட்டத்தை இந்தச் சிக்கிம் இணைப்பிற்காகத் திருத்தி மாற்றியமைக்கிறோமோ அதே போல் அரசியல் சட்டத்தை மாற்ற முடியாது என்பதல்ல, மாற்ற முடியும். மாநில சுயாட்சி உரிமையை நாம் கேட்கலாம். 21 மாநிலங்களுக்கு மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறோம். இனிமேல் 22 மாநிலங்களுக்கு மாநில சுயாட்சி வேண்டு மென்று கேட்கிற நிலை தான் வரும்.

மாநில சுயாட்சி கேட்பதற்கும் இந்த சிக்கிம் பிரச்சினைக்கும் இடையே எந்தவிதமான இடர்பாடும் ஏற்படவில்லை. பாண்டிச் சேரி, கோவா, டையூ, டாமன் போன்றவை இந்தியாவோடு சேர்ந்தன. இப்போது சிக்கிம் சேருகிறது. திரு. கே.டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்ட மாதிரி நேபாளம், பூடான்,

திபெத் போன்ற மற்றப் பகுதிகளும் சேர்க்கப்படும் நிலை வந்தால் நல்லதுதான். அப்போது அவைகளுக்கும் சேர்ந்து நாம் மாநில சுயாட்சி கேட்கலாம். ஆனால் அந்தப் பிரச்சினைக்கும் இந்தப் பிரச்சினைக்கும் சம்பந்தமில்லை. அது எப்போதும் அழுத்தந் திருத்தமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. நம்பிக்கை இழந்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். 'இடம் மாறினால் நம்பிக்கை மாறலாம், சூழ்நிலை மாறினால் நம்பிக்கை மாறலாம், கவனிக்க வேண்டும். 'இடம் மாறினால் நம்பிக்கை மாறலாம் சூழ்நிலை மாறினால் நம்பிக்கை மாறலாம், என்று நாவலர் பேசி யிருக்கிறார்.

அன்றைக்கு நாவலர் அவர்கள் இதே அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது யார் இடம் மாறியதைப்பற்றியோ எந்தச் சூழ்நிலை மாறியதைப்பற்றியதோ அல்ல, எடுத்து வைக்கப் பட்ட வாதங்கள், ஆட்கள் பேசுவதல்ல, எடுத்து வைக்கப்பட்ட அறிவுரைகள், எடுத்து வைக்கப்பட்ட வாதங்கள், வலிவான வாதங்கள் அப்படியே இருக்கின்றன. அந்த வகையிலே மத்தி யிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்று நம்முடைய நிதியமைச்சர் நாடாளுமன்றத்திலே வலியுறுத்திய அந்தக் கொள்கை, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அந்தக் கொள்கை வலியுறுத்தப்படுகிற வகையிலே மாநிலங்களிலே சுயாட்சி அமைகின்ற வகையிலே அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

தேச விரோத சக்திகள் என்ற பெயர் சூட்டி கட்சியை தடை செய்து விடக்கூடிய ஆபத்து வந்துவிடுமோ கட்சியைக் காப்பாற்ற வேண்டுமென்ற முறையிலே அகில இந்திய என்ற சொல்லை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதோடு சேர்த்துக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அகில இந்திய என்று சேர்த்துக் கொண்டாலும் எங்களையும் உங்களையும் சேர்த்துப் பிராந்திய கட்சிகள் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தருகின்ற பரிசோ, தருகின்ற பட்டமோ, சூட்டுகின்ற பெயரோ நம்மைப்பற்றிய அவர்களுடைய எண்ணத்தை மாற்றிவிடாது. அகில இந்திய அளவிலே இருக்கின்ற கட்சிகள்கூட, அகில இந்திய என்ற அடைமொழியைப் போடுவதில்லை. உதாரணமாக மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உண்மையில் ஒரு அகில இந்திய கட்சியாக இருந்தபோதிலும் தேவையில்லாமல் அகில இந்திய என்று சொல்லிக் கொண்டிருப்பதில்லை. ஆகவே இனிமேலாவது அகில இந்திய என்பது இல்லாமல் அதிலிருந்து மாறி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரிலேயே நீங்கள் வழங்கலாமா என்று யோசிக்கலாம்.

திரு. ரா. உமாநாத்: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைக் பொறுத்தவரைக்கும் சி.பி.ஐ.(எம்.) என்றுதான் இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) என்று தான் போடுகிறோம்.

திரு. மு. கருணநிதி : பெயர் போடப்பட்டுள்ளது. நான் அதைத் தான் மிக ஜாக்கிரதையாகச் சொன்னேன் அவர்கள் சொல்கிறபோது யாரும் அனைத்திந்திய சி.பி.ஐ.(எம்)என்று சொல் வதில்லை. ஆனல் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒவ்வொருவரும் இங்கே பேசும்போது அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் என்று தவருமல் சொல்கிருர்கள், அப்படிப் போட்டும்கூட பயனில்லை என்பதும் நம்மை மாநிலக் கட்சிகள் என்றுதான் கருதுகிருர்கள் என்பதையும் தெரிவித்து, இப்படிப் பட்ட திருத்தங்கள் மேலும் மேலும் வருகின்ற நாளை எதிர் பார்ப்போம், மாநிலங்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு சுயாட்சித் தமிழகம் அமையும் திருத்தங்கள் வருகின்ற அந்த நன்னளை எதிர்பார்ப்போமாக! அதற்கு நாம் அனைவரும் பாடுபடுவோமாக!

திரு. ஜே. ஜேம்ஸ் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிய போது அகில இந்திய அண்ணு தி.மு.க.வுக்கும், தி.மு.க.வுக்கும் இருக்கிற வித்தியாசத்தை சுட்டிக் காட்டினர்கள். அகில இந்திய என்ற வார்த்தைகளை எடுத்துவிட்டு அண்ணு தி.மு.க. என்றே அழைப்பதில் தவறில்லை என்று சொன்னர்கள். நான் எதிர்க் கட்சி தலைவர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். இந்த வித்தியாசத்தை ஒழிப்பதற்கு அவர்கள் கட்சியை அகில இந்திய தி.மு.க. என்று சூட்டிக் கொண்டாலும் அதுவும் தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணநிதி : நாங்கள் எந்தப் பெயரைச் சூட்டிக் கொண்டாலும் இரண்டும் ஒரே குட்டையிலே ஊறிய மட்டைகள் என்றுதான் நீங்கள் சொல்லப்போகிறீர்கள்.

*THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR.—Mr. Speaker, Sir, I must express my sense of gratitude to the Members of this House, particularly the Hon. Member Thiru K. Suppu, Hon. Members Thiru O. S. Velusamy, Thiru R. Umanath, Thiru J. James, Thiru S. Alagirisamy and Thiru Margabandu and the Hon. Leader of the Opposition, Thiru M. Karunanidhi.

Excepting for some slight, rather slender discordent note sounded by Mr. R. Margabandu in respect of Article 31-D, the entire House has been unanimous in lending its support to the Resolution as it stands. Even Thiru Margabandu, in the end has expressed his wholehearted support to the Resolution as framed and placed before this House. In my view one of the worst apparatus, one of the worst instruments of tyranny, one of the worst features of what I call, personal absolutism has been incorporated into the Constitution of